வேண்டும். வரி இல்லாத பொருள்கள் எவ்வளவோ இருக்கின்றன. உணவு பொருட்களுக்கு வரி இல்லை ஆனால் அவைகளின் விலை ஏறித்தான் இருக்கிறது.

(பிற்பகல் 1—30)

வாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மற்றவைகள் எல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்கிற விஷயங்கள் என்று சொல்லி இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து, மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன், ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 9—9—1982 ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

85. தமிழ்நாடு 1980—ஆம் ஆண்டு உணவகங்கள் மற்றும் தங்குமிடங்களில் உள்ள ஆடம்பரப் பொருட்கள் மீதான வரி விதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 19—5—1982 ஆம் ஆண்டு தேதியிடப்பெற்ற 554—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு உணவகங்கள்

மற்றும் தங்குமிடங்களிலுள்ள ஆடம்பரப் பொருட்கள் மீதான வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

86. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விபத்துக்கள் கேட்பு தீர்பாய விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 2—4—1982 ஆம் தேதியிடப்பெற்ற 768 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

87, தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 18—5—1982 ஆம் தேதியிடப்பெற்ற 1219 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

88. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 18-5-1982 ஆம் தேதியிடப்பெற்ற 1220 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1959 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

89. தமிழ்நாட்டிலுள்ள கண்பார்வை இழந்தோர்களுக்கான திருவாளர்கள் கிறுத்துவ நிறுவனத்திற்குச் சொந்தமான TMU 6983 ஆம் எண் வண்டிக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்த அனுமதிப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து—1) 24—4—1982 ஆம் தேதியிடப்பெற்ற 1002 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

13. 1982 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசர சட்டம் எண் 10/1982)

14. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு.

15. 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (நாற்பத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான செய்திக் குறித்து மாநிலங்களவை செயலாளரிடமிருந்து வரப்பெற்றக் கடித எண். 1/21/81-பி, தேதி 18—8—1982—ன் நகல்.